


**19.12. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்றும் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

2. நம் நாடு பாதுகாப்புத்துறையில் தன்னிறைவை நோக்கி விரைந்து செல்வதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. நாட்டின் சுகாதார மருத்துவ உபகரணங்கள் பிரிவில் பிரகாசமான வாய்ப்புகள் காணப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் 18 மாவட்டங்களில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 34 உயர்மட்ட பாலங்கள் கட்டுவதற்கு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

5. தேசிய சித்த மருத்துவ தினத்தை ஒட்டி பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு மூலிகை கண்காட்சி இன்று நடைபெறுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**நாடாளுமன்றம்**

**அரசியல் சிற்பி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் குறித்து** மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷாவின் கருத்துக்கள் தொடர்பான பிரச்சனையில் அமளி நிலவியதால் நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கபட்டன.

மக்களவை இன்று கூடியதும் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாடி உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள், அவையின் மையப்பகுதியில் குழுமி, உள்துறை அமைச்சருக்கு எதிராக கோஷங்களை எழுப்பி முழக்கமிட்டதால் நிலவிய அமளி காரணமாக அவைதலைவர் திரு. ஓம்பிர்லா பிற்பகல் 2 மணிவரை மக்களவையை ஒத்திவைத்தார்.

**மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை** எதிரொலித்ததால் அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖

**நாடாளுமன்றம் தொடர்ச்சி**

**இதனிடையே ஆளும் பி.ஜே.பி. உறுப்பினர்கள்** காங்கிரஸ் கட்சி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு அவதூறு பிறப்பித்ததாக கூறி நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பதாகைகளை ஏந்தியவாறு ஆளும் தரப்பினர் கோஷங்களை எழுப்பி முழக்கமிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அனுராக் சிங் தாகூர், டாக்டர் அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருதை காங்கிரஸ், தனது ஆட்சியின் போது அறிவிக்கவில்லை என்றும், அவரது புகைப்படத்தை பழைய நாடாளுமன்ற மத்திய வளாகத்தில் வைக்க அனுமதிக்கவில்லை என்றும் குறைகூறினார்.

**இந்நிலையில்** ஆளுங்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பி.ஜே.பி. உறுப்பினர் திரு பிரதாப் சாரங்கியும், திரு, முகேஷ் ராஜ்புட்டும் காயமடைந்தனர்.

திரு.ராகுல்காந்தி தலைமையிலான காங்கிரஸ் உறுப்பினர்களே இதற்கு காரணம் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால் எதிர்கட்சி தலைவர் திரு. ராகுல் காந்தி பேசுகையில் தாம் அவைக்குள் நுழைய முயன்ற போது பி.ஜே.பி. உறுப்பினர்கள் தம்மை தள்ளிவிட்டதாகவும், இதுதொடர்பான காட்சிகள் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளதாகவும், இதை சரிபார்த்துக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார்.

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில் தம்மையும் பி.ஜே.பி. உறுப்பினர்கள் தள்ளி விட்டதாகவும், இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று மக்களவை தலைவருக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖

**m];tpdp it\;zt;**

**ehlhSkd;wj;jpd; khz;ig fhq;fpu]; fl;rp** Fiwj;J tpl;ljhf> kj;jpa jfty; xypgug;Gj;Jiw mikr;rh; jpU.m];tpdp it\;zt; Fiw $wpAs;shh;.

GJjpy;ypapy; ,d;W nra;jpahsh;fsplk; Ngrpamth;> ehlhSkd;wj;jpy; vjph;fl;rpapdhpd; Mh;g;ghl;lj;jhy; ,U gpN[gp cWg;gpdh;fs; fhakile;j rk;gtk; njhlh;ghf> fhq;fpu]; fl;rpf;F fLk; fz;ldk; njhptpj;Js;shh;.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

மத்திய மாநில அரசுகளின் நலத்திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் பணிகளை மத்திய தகவல் அலுவலகம் மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், அரசின் சாதனைகளை அச்சு மற்றும் மின்னனு ஊடகங்கங்களுக்கு தெரிவிக்கும் அதிகார அமைப்பாக இவ்வலுவலகம் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி 2 நாள் அரசுமுறை** பயணமாக நாளை மறுநாள் குவைத் செல்கிறார்.

குவைத் அமீர் **Sheikh Al-Sabah**-வின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் பிரதமர், இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம், கல்வி, வேளாண் தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**ராஜ்நாத் சிங்**

**நவீன போர் முறைகளுக்கு ஏற்ப உயர்** தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், நம் நாடு பாதுகாப்புத்துறையில் தன்னிறைவை நோக்கி விரைந்து செல்வதாக எடுத்துரைத்தார்.

ஒருகாலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் தற்போது ஏற்றுமதி செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

பொது, தனியார் துறைகள், கல்வி மற்றும் படைப்பாற்றல் திறன் பிரிவுகளில் ஒருங்கிணைந்த முயற்சியால் இது சாத்தியமானதாக குறிப்பிட்டார்

வருங்காலங்களில் நாட்டின் பாதுகாப்புத்துறை நவீன தொழில்நுட்பங்கள் உள்ளடக்கிய பிரிவாக வலுப்பெறும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இளையோரின் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**அனுப்பிரியா பட்டேல்**

நாட்டின் சுகாதார மருத்துவ உபகரணங்கள் துறையில் பிரகாசமான வாய்ப்புகள் காணப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வருடாந்திர உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் அதிகரித்து வரும் சந்தை வாய்ப்புகள் மற்றும் சுகாதார தேவைகளால் இத்துறை வளர்ச்சி கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய மருத்துவ உபகரணங்கள் சந்தை தற்போது 14 பில்லியன் டாலர் வர்த்தகம் புரிந்து வருவதாகவும் இது, அடுத்த 6 ஆண்டுகளில் 30 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பிரிவில் இந்தியா 4-வது பெரிய நாடாக திகழ்கிறது என்றும அமைச்சர் எடுத்துரைத்தார்

விரைவில் இத்துறையில் ஏற்றுமதி நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர் – பாலங்கள்**

தமிழகத்தில் 18 மாவட்டங்களில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 34 உயர்மட்ட பாலங்கள் கட்டுவதற்கு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி திருச்சியில் 3 பாலங்களும்,

தஞ்சை, தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஏனைய பாலங்கள் அமையவுள்ளன.

இதற்கான கட்டுமானப்பணிகள் உடனடியாக தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகள், இணைப்பு வசதி இல்லாத குடியிருப்பு பகுதிகளில் உயர்மட்ட பாலங்களை முன்னுரிமை படுத்தியதன் அடிப்படையில் இப்பாலங்கள் கட்டப்பட உள்ளன.

**முதலமைச்சர்**

**இதனிடையே ஈரோடு மாவட்டத்தில் முதலமைச்சர் திரு.** மு.க.ஸ்டாலின் இன்றும் நாளையும் களஆய்வு மேற்கொள்கிறார்

இதனொரு பகுதியாக நாளை 951 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைப்பதுடன், 222 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் **இரண்டு கோடியாவது பயனாளிக்கு** மருத்துவ பெட்டகத்தை முதலமைச்சர் இன்று வழங்கினார்

❖❖❖❖❖❖

**கே.ஆர்.பெரியகருப்பன்**

**தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் மேம்பாட்டு** பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் 64 லட்ச ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கிவைத்த அவர், கிராமப்புறங்களில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர், பள்ளிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மகளிர் உரிமை தொகை, புதுமை பெண், மாணாக்கருக்கு ஊக்கத்தொகை உள்ளிட்ட திட்டங்கள் நாட்டிலேயே முன்னோடி திட்டங்களாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**மெய்யநாதன்**

**தமிழக அரசின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை** மாணாக்கர் உரிய முறையில் பயன்படுத்தி உயர்நிலையை அடைய வேண்டுமென்று மாநில சட்ட அமைச்சர் திரு. ரகுபதி கூறியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட வேலைவாய்ப்பு துறை சார்பில் கந்தர்வக்கோட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தொழில் பிரிவுகள் தொடங்கப்பட்டு உள்ளதாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் தமிழ்நாட்டில் மாணாக்கரின் கல்வி நலனை கருத்தில் கொண்டு, பள்ளி கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**ராஜேந்திரன்**

**தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகளவில் செம்மண் பரப்பு** கொண்ட, செம்மண் தேரி பகுதிகளை சுற்றுலா தளமாக உருவாக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி முள்ளக்காடு பகுதியில் கடல் சாகச விளையாட்டு மையம் அமைக்கும் திட்டத்தை மாநில மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் உடன் இன்று ஆய்வு செய்தஅவர், இப்பகுதியை சுற்றுலாத்தளமாக மாற்றும் வகையில் நீர் சாகச விளையாட்டு போட்டிகள் மையம் அமைக்கப்படும் என்றார்.

தூத்துக்குடி ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட அகழாய்வு மையங்களையும் சுற்றுலா தளமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**சித்தா தினம்**

**தேசிய சித்த மருத்துவ தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.**

சித்த மருத்துவத்தின் தந்தை என போற்றப்படும் அகஸ்தியர் பிறந்த நாள், தேசிய சித்த மருத்துவ தினமாக கொண்டாடப்படுகிறது.

**பொது சுகாதாரத்திற்கான சித்தமருத்துவம்** என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் சார்பில் பெரம்பலூர் மாவட்டம் குன்னத்தில், சிறப்பு சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சி இன்று நடைபெற்றது.

சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு மூலிகை கண்காட்சி நடைபெறுவதோடு, யோகா சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

சித்த மருத்துவ தினத்தின் முக்கியத்துவம் குறித்து திருச்சி மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் டாக்டர் கே. அன்பரசு எமது செய்தி பிரிவிடம் பேசுகையில்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**யானை வாய்ஸ்**

**உடுமலை மூனாறு சாலையில் காட்டு யானைகள்** நடமாட்டம் அதிகரித்துள்ளதால் அப்பகுதிகளில் செல்லும் வாகன ஓட்டிகள் வன உயிரினங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாவண்ணம் பயணிக்க வேண்டும் என வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**கிறிஸ்துமஸ் - தூத்துக்குடி**

**தமிழகத்தின் தென் பகுதிகளில் கிறிஸ்துமஸ் குடில்** அலங்காரங்கள் ஆண்டுதோறும் மிக விமரிசையாக இடம்பெறுவது வழக்கமாக உள்ள நிலையில் தூத்துக்குடியில் இதற்கான சொரூபங்கள் தயாரிக்கும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப் படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**பளு தூக்கும் போட்டி**

**தோஹாவில், ஆசிய இளையோர் ஜுனியர் பளு தூக்கும்** சாம்பியன்ஷிப் போட்டிகள் இன்று நடைபெறுகிறது.

வரும் 25-ம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் இந்தியா சார்பில் ஜுனியர் பிரிவில் 15 பேரும், இளையோர் பிரிவில் 13 பேரும் களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**இந்திய - வெஸ்ட் இண்டிஸ் மகளிர்** அணிகளுக்கு இடையிலான 3-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**